Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: திருமதி. பு.கவிதா, B.E., M.Plan.,

ந.க.எண். 1081/2018 செ.ம.-3 **நாள்:20.03.2019**

பொருள் : அனுமதியற்ற மனைப்பிரிவுகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017 - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், செங்கல்பட்டு மண்டலம், செங்கல்பட்டு – காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், மதுராந்தகம் நகராட்சி, மதுராந்தகம் கிராமம், சர்வே எண் : 1153/2pt-ல் மொத்த பரப்பு 0.81 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண். 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(3) நாள் : 04.05.17
2. அரசாணை (நிலை) எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(3) நாள் : 13.10.17
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை-2 அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண்.13193/2017/LA2 நாள் : 30.10.17, 31.10.17, 07.11.2017, 17.11.2017 (ம) 20.12.2017
4. மனுதாரர் திருமதி. Manjula syamnath, அவர்களின் விண்ணப்பம் நாள் :15.02.2018.

****

உத்தரவு :

பார்வை(1) மற்றும் (2)-ல் கண்ட அரசாணையின்படியும் பார்வை (3)-ல் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படியும் பார்வை 4-ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலினை செய்யப்பட்டு கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், மதுராந்தகம் நகராட்சி, மதுராந்தகம் கிராமம், சர்வே எண் : 1153/2pt -ல் மொத்த பரப்பு 0.81 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **ம.வ./ந.ஊ.து.இ.(செ.ம.)எண்:** 139(R)/2019 என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் (in-principle approval) வழங்கப்படுகிறது.

மனைப்பிரிவின் மொத்த பரப்பு	:	0.81 ஏக்கர் (அ) 35283.00 ச.அடி
விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை	:	3
விற்கப்பட்ட மனை எண்கள்	:	1,8,9.
விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை	:	19
விற்கப்படாத மனை எண்கள்	:	2,2a,3-8pt,10-20.
விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு	:	21558.00 ச.அடி
மொத்த மனைகள்		22

திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) : **2447.00 ச.அடி (10.19%)**

செலுத்தப்பட வேண்டிய கட்டண விபரங்கள் :-

1. **பரிசீலனைக் கட்டணம் :**

இணையதளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/- வீதம், பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விவரம்	DTCP/L/0047373/2017, dt.15.02.2018. Plot No : 1,2,2a,3,4,5,6,7,7a,8,8a,9,10,11,12,13,14,15,16,17,18,19,20,20a ஆகியவற்றிக்கு ரூ.12000 /- பெறப்பட்டுள்ளது.

பரிசீலனைக் கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை Director of Town and Country Planning; SBI, Chengalpattu, Account No. 11006351587-ன் வாயிலாக செலுத்த வேண்டும்.

2. **வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் :**

மனை எண்	பரப்பளவு (சதுர அடி)	பரப்பளவு (ச.மீ)	வரன்முறைபடுத்தும் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு 60 ரூபாய் வீதம்) (ரூபாயில்)	வளர்ச்சிக் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு 150 ரூபாய் வீதம்) (ரூபாயில்)
1	872	81.04	4862.45	12156.13
2	1303	121.10	7265.80	18164.5
2a	1290	119.89	7193.31	17983.27
3	848	78.81	4728.62	11821.56
4	1181	109.76	6585.50	16463.75
5	1234	114.68	6881.04	17202.6
6	1235	114.78	6886.62	17216.54
7	1228	114.13	6847.58	17118.96
8	872	81.04	4862.45	12156.13
8PT	263	24.44	1466.54	3666.357
9	980	91.08	5464.68	13661.71
10	1158	107.62	6457.25	16143.12
11	1202	111.71	6702.60	16756.51
12	1234	114.68	6881.04	17202.6
13	1263	117.38	7042.75	17606.88
14	1502	139.59	8375.46	20938.66
15	1036	96.28	5776.95	14442.38
16	1040	96.65	5799.26	14498.14
17	1053	97.86	5871.75	14679.37
18	1179	109.57	6574.35	16435.87
19	1167	108.46	6507.43	16268.59
20	1142	106.13	6368.03	15920.07

மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணைய தளம் வாயிலாகவும் அல்லது கீழ்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

அ. வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத் தலைப்பு

0217 Urban Development – 60 other Urban Development Schemes - 800 Other receipts AT Receipts under Regularisation Charges of Unapproved layout and Plots – DTCP 27 Non Taxation Fees-30 Regularisation (DPC: 0217 60 800 AT 2730)	சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம்

ஆ. வளர்ச்சிக் கட்டணம் கீழ்காண் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தலாம்.

வங்கியின் பெயர் மற்றும் கணக்கு எண்:

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்பந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்வை 1 மற்றும் 2-ல் சுட்டிய அரசாணைகளின்படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நிபந்தனைகள் :

1. அரசாணை(நிலை) எண்: 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்: 13.10.17-ல் விதி எண்:7(g)(ii)-ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு மனைப்பிரிவு சாலைகள், சாலை நீட்டிப்புகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்மந்தப்பட்ட உள்ளாட்சிக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரிசீலணைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர்,
செங்கல்பட்டு.

இணைப்பு : மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள்

பெறுநர் : ஆணையாளர்,
மதுராந்தகம் நகராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம்.

நகல் :1. Manjula syamnath,
No51/6 Sir Madavan road,
Mahalingapuram, Chennai – 600 034.

2. நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர்,
செங்கல்பட்டு மண்டலம்.

3. நகர் ஊரமைப்பு ஆணையர்,
807, அண்ணா சாலை, சென்னை – 02,
அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

4. கணக்குப்பிரிவு – செங்கல்பட்டு மண்டலம்.

5. உதவி இயக்குநர் (நில அளவை)
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
காஞ்சிபுரம்.

6. வட்டாட்சியர்,
மதுராந்தகம் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

(5, 6) சாலைகள் , மற்றும் OSR இடங்கள் பகுதியினை உட்பிரிவு செய்து உள்ளாட்சி பெயரில் மாற்றம் செய்யும் பொருட்டு.

7. சார்பதிவாளர்,
மதுராந்தகம் சார்பதிவாளர் அலுவலகம்,
காஞ்சிபுரம்.

(7) சாலைகள் மற்றும் OSR இடங்கள் பகுதியினை உட்பிரிவு செய்து உள்ளாட்சி பெயரில் பதிவு செய்யும் பொருட்டு.

109

<u>மதுராந்தகம் நகராட்சி ஆணையாளரின் செயல்முறை ஆணை</u>

<u>முன்னிலை – திரு வ.நாராயணன் எம்.ஏ.,</u>

*****

ந.க. எண். 427/2019/எப் 1 நாள் :- 05.02.2020

பொருள் :- அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017 – காஞ்சிபுரம் மாவட்டம் – மதுராந்தகம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மதுராந்தகம் கிராமம் – சர்வே எண்.1153/2 Pt.–ல் மொத்த பரப்பு 0.81 ஏக்கர் பரப்பு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குவது – தொடர்பாக

பார்வை :-

1. அரசாணை (நிலை) எண். 78 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை ந.வ.4(3) நாள். 04.05.2017
2. அரசாணை (நிலை) எண். 172 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை ச.ந.வ.4 (3) நாள். 13.10.2017
3. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் கடிதம் ந.க.எண். 1081/2018 (செ.ம3) நாள் : 20.03.2019.
4. அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு வழஙகப்பட்ட எண். ம.வ./நஊ.து.இ. (செ.ம.) 139/(R)2019
5. தங்களின் நகராட்சிக்கு அளிக்கப்பட்ட விண்ணப்பம் நாள். 12.06.2019
6. திருமதி. மஞ்சுளா சியாம்நாத், 51/6 சார் மாதவன் ரோடு மஹாலிங்கபுரம், சென்னை–34 அவர்களின் கடிதம் மற்றும் இணைப்புகள் நாள். 24.01.2020
7. இந்நகராட்சியின் நகர் சார் ஆய்வாளரின் 11.07.2019ன் தேதிய அறிக்கை.
8. இந்நகராட்சி நகரமைப்பு ஆய்வரின் அறிக்கை நாள் : 05.12.2019 (ம) 30.01.2020ன் தேதிய அறிக்கை.
9. உள்ளூர் திட்டக் குழுமம் அனுமதி எண். 08/2020. நாள். 05.02.2020

****

<u>உத்திரவு.</u>

பார்வை 1 மற்றும் 2ல் கண்ட அரசாணையின்படியும், செங்கல்பட்டு நகர் ஊரமைப்பு துணை இயக்குரின் பார்வை 3ல் கண்டுள்ள உத்திரவின்படியும், மதுராந்தகம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மதுராந்தகம் கிராமம் – சர்வே எண். 1153/2 Pt.ல் மொத்த பரப்பு 0.81 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனை பிரிவிற்கு ம.வ./ந.ஊ.து.இ. (செ.ம) எண்.139(R) /2019 என எண்ணிடப்பட்டு உரிய நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான மனை பிரிவு ஒப்புதல் (in principal approval) வழங்கப்பட்டு உத்திரவிடப்பட்டுள்ளது .

1. மனைப்பிரிவின் மொத்த பரப்பு – 0.81 ஏக்கர்(அ) 35283.00ச.அடி
2. விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை – 3
3. விற்கப்பட்ட மனை எண்கள் – 1,8,9
4. விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை –19
5. விற்கப்படாத மனை எண்கள் : 2,2a,3,8 Pt., 10-20
6. விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு : 21558. 00ச.அடி
7. மொத்த மனைகள் – 22
8. திறந்த வெளி ஒதுக்கீடு (OSR) – 2447.00 ச.அடி (10.19%)

பார்வை 3–ன்படியான நகர் ஊரமைப்பு துணை இயக்குநரின் கடிதத்தின்படி மேற்படி மனைப்பிரிவில் உள்ள விற்கப்படாத மற்றும் விற்கப்பட்ட மனைகளுக்கு மனை ஒன்றுக்கு ரூ.500/- வீதம் ரூ.12,000/- DTCP/L/0047373/2017/15.02.18ல் பெறப்பட்டுளளது. மேலும் பார்வை 8–ல் காணும் நகரமைப்பு ஆய்வரின் அறிக்கையின்படி வரன்முறைப்படுத்துதல் கட்டணம் விற்கப்படாத மனைகளுக்கு அரசு தலைப்பு கணக்கில் DTCP மூலம் ரூ.150300/- (விற்பனை செய்யப்படாத 19 மனைகள் மட்டும்) Challan No, 36 நாள். 07.01.2020 அன்று செலுத்தப்பட்டு ரசீது நகல்கள் இணைக்கப்பட்டுள்ளது.

வளர்ச்சி கட்டணம் விற்கப்படாத மனைகளுக்கு அரசாணை எண்.172, நாள்.13.10.2017ன்படி ரூ.3,00,600/- மதுராந்தகம் நகராட்சிக்கு வரவோலை மூலம் இந்நகராட்சி ரசீது எண்.019/01/1/19-20/0005659, நாள்.29.01.2020–படி அபிவிருத்தி கட்டணமாக செலுத்தப்பட்டதிற்கு இரசீது நகல் இணைக்கப்பட்டுள்ளது.

அரசாணை எண்.(நிலை) 78 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள்.04.05.2017–ன்படி பிரிவு 2(7)ன்படி மொத்த மனைப்பிரிவில் 10.19% OSR பரப்பை மதுராந்தகம் நகராட்சிக்கு

1. பூங்கா 1 – 2447 சதுர அடி

மட்டும் மதுராந்தகம் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 4746/2019 நாள்.16.12.2019ன் மூலம் மதுராந்தகம் நகராட்சிக்கு தானமாக வழங்கப்பட்டுள்ளது.

ஒப்புதல் வழங்கப்பட்ட வரைபடத்தின்படி சாலை மற்றும் திறவிட அளவு சரியாக உள்ளது என இந்நகராட்சி நகர சார் ஆய்வாளரும் மற்றும் நகரமைப்பு ஆய்வரும் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

Lushee Nagar

(11)

எனவே பார்வை 7 மற்றும் 8 ன்படியான நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் நகர சார் ஆய்வாளரின் அறிக்கையின்படியும், செங்கல்பட்டு நகர் ஊரமைப்பு துணை இயக்குநரின் பார்வை 3ல் கண்டுள்ள உத்தரவின்படியும், அவ்வுத்திரவில் கொள்கை அளவிலான ஒப்புதல் (in principal approval) வழங்கப்பட்ட மேற்சொன்னவாறான விற்கப்படாத 19 எண்ணிக்கையில் (2,2a,3-8Pt., 10-20) உள்ள மனைகளுக்கு மட்டும் கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்படுத்தி கொள்கை அளவிலான வரன்முறை ஆணை வழங்கி உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்திரவு தணிக்கை தடைக்கு உட்படுத்தி வழங்கப்படுகிறது.

1. மேற்படி விவர அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டதின் அடிப்படையில் இந்த வரன்முறை உத்திரவு கொள்கையளவில் மேற்படி விற்கப்படாத 19 மனைகளுக்கு மட்டும் பொருந்தும்.

2. மேற்படி விற்கப்பட்ட மற்ற மனையில் அமையும் மனைகள் வரன்முறையாக கருதப்படமாட்டாது மற்றும் விற்கப்பட்ட மனைதாரர்களுக்கு தகவல் தெரிவித்து விரைவில் உரிய தொகையை செலுத்துமாறு தெரிவிக்கப்பட வேண்டும்.

3. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் செங்கல்பட்டு மண்டலம் அலுவலகத்தில் கொள்கையளவில் அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் மாற்றம் ஏதும் செய்யக்கூடாது.

4. மனைப்பிரிவு வரன்முறை செய்தல் தொடர்பாக அரசால் அவ்வப்போது அரசால் பிறப்பிக்கப்படும் அரசாணை மற்றும் அரசு விதிமுறைகளின்படி இவ்வொப்புதல் மாறுதலுக்குரியது.

5. அரசாணை எண். (நிலை) 172 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை ந.வ.4 (3) நாள். 13.10.17ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு மனைப்பிரிவில் உள்ள சாலைகள் (ம) திறந்தவெளி ஒதுக்கீடு பகுதிகள் அனைத்தும் சம்மந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்ட பிறகு நிலவியல் மாற்றம் ஏதும் செய்யப்பட கூடாது.

6. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப் பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மற்றும் தனி நபர்கள் உரிய ஆவணங்கள் கொடுத்து ஆட்சேபனை தெரிவித்து அவர்களுக்கு சாதகமாக இருப்பின் இம்மனைப் பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

7. இவ்வுத்திரவு கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் காலிமனை வரி செலுத்தப்பட வேண்டும்.

8. இவ்வுத்திரவு அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு வரன்முறைப்படுத்துவது மட்டுமே. கட்டிட அனுமதிக்கு கருதப்பட மாட்டாது. மேற்கண்ட நிபந்தனைகளை மீறும் பட்சத்திலும் தெருக்கள் மற்றும் திறவிடம் ஆகியவைகளில் ஆக்கிரமிப்பு செய்தாலோ தானாகவே மனைப்பிரிவு அனுமதி ரத்து செய்யப்படும்.

ஆணையர்
மதுராந்தகம் நகராட்சி

பெறுநர்

திருமதி. மஞ்சுளா சியாம்நாத் ,
எண்.51/6 சார் மாதவன் ரோடு
மஹாலிங்கபுரம்
சென்னை – 34.

நகல்:- துணை சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
மதுராந்தகம்.

நகல்:- நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்
செங்கல்பட்டு மண்டலம்,
செங்கல்பட்டு



our services doesn't just end there

Buying & Selling Services
Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services
Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals
Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services
Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services
Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate